LIBRARY
AUG 1958
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, the 24th March 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Foodgrains Enquiry Committee

*378 *Q.*—SRI P. S. CHINNADURAI AND SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the views of the Government have been called for on the report of the Foodgrains Enquiry Committee;

(*b*) if so, whether the State Government have conveyed their views to the Central Government; and

(*c*) the views expressed by the State Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) & (*c*) The recommendations of the Foodgrains Enquiry Committee are still being examined and the Government hope to formulate their views and communicate them to the Government of India soon.

SRI N. K. PALANISAMI: ஸார், இந்த அசோக் மேத்தா கமிட்டி உணவுப் பொருள்களுடைய குறைந்த பட்ச விலை, அதிக பட்ச விலை இவைகளை நிர்ணயிக்கவேண்டுமென்று சொல்லியதன் காரணமாக விலை வாசிகள் ஏறுகிறது. அப்படி ஏறுகிற விலைவாசியைக் கட்டுப்படுத்த ஏதாவது யோசனை சொல்லியிருக்கிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: குறைந்த பட்ச விலை, அதிக பட்ச விலை இரண்டுக்கும் ஒரே சமயத்தில் அவசியம் இருக்காது. அதிக பட்ச விலை என்று சொல்லும்போது, விலை அதிகமாகிக்கொண்டு போகிறது என்று அர்த்தம். குறைந்த பட்ச விலை எனபது விலை ரொம்பக் குறைந்து போகிறது என்று அர்த்தம். விவசாயிகளுக்கு கவலை இல்லாமல் செய்யவேண்டும். அதோடு உண்ணுகிறவர்களுக்கும் தொல்லை இல்லாமல் இருக்கவேண்டும் என்று பல சிபார்சுகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது.

SRI M. JAGANNATHAN: Have the Government taken any steps so far to investigate the causes for the rise in the price of foodgrains in our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, the Ashok Mehta Committee has dealt with this question and we are not examining their observations and recommendations.

[24th March 1958

Sri N. K. PALANISAMI : இப்போது விலைவாசிகள் ஏறிக் கொண்டிருப்பதன் காரணமாகவும், ஜனங்கள் அதிகப்படியாக அரிசி சாப்பிடுவதன் காரணமாகவும் இந்த கமிட்டி சொல்லியிருக்கிறது. ஆகவே, இன்றைய தினம் சர்க்கார் பூராவையும் கோதுமையாகக் கொடுப்பதற்கு பதிலாக, பாதி கோதுமையும் பாதி அரிசியும் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அரிசி விலையைக் குறைக்க வேண்டும்என்பது என்னுடைய அபிப்பிராயம், சர்க்காருடைய அபிப்பிராயம். அதற்கு இன்னும் அரிசி உற்பத்தியைப் பெருக்குவதுதான் சிறந்த முறை. இப்போது நியாய விலைக் கடைகளில், ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல், இப்போது இருக்கும் நிலையில் அரிசி விற்பனை அவசியமில்லை என்று கருதுகிறோம். ஆகவே, குறைந்த விலைக்கு வேண்டுமென்கிறவர்கள் கோதுமை வாங்கிக்கொள்ளட்டும் என்று கோதுமை மட்டும் விற்கப் படும்.

Mr. SPEAKER : அடுத்த கேள்விக்கு பதிலளிக்க கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இப்போது இங்கில்லை. ஆகவே, அந்தக் கேள்வி பிற்பாடு எடுத்துக்கொள்ளப்படும்.

Gypsies

* 380 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any representation has been received recently from the gypsies in Chengam taluk about their welfare; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Yes, Sir. A representation has been received from Narikoravars.

(*b*) The matter is under consideration of the Collector of North Arcot.

Sri A. A. RASHEED : What is the population of the gypsies and whether schools have been opened for them?

The Hon. Sri P. KAKKAN : Let the hon. Member put a separate question.

Sri A. V. P. ASAITHAMBI : இந்த ஜிப்ஸி ஜாதியார் " பாக்வேர்டு " ஜாதியார் என்று கருதப்படுகிறார்களா அல்லது " பார்வேர்ட் " ஜாதியார் என்று கருதப்படுகிறார்களா ?

The Hon. Sri P. KAKKAN : ஜிப்ஸி ஜாதியார் முன்னேற்றம் அடைந்த ஜாதியார் இல்லை. பின் தங்கிய ஜாதியார்தான்.

Sri V. K. KOTHANDARAMAN : இந்த ஜிப்ஸி ஜாதியார் ஷெட்யூல்ட் டிரைப்ஸில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஜில்லாக் கலெக்டர் இவர்களுடைய பிரச்னையைத் தீர்த்து வைக்கவில்லை. ஆகவே, உடனடியாக இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்வார்களா ?

The Hon. Sri P. KAKKAN : இந்தக் கேள்வி முதல் கேள்வியிலிருந்து எழவில்லை. அவர்களுக்குக் கொடுத்த இடம் பாரெஸ்டு இடமாக இருந்தது, அவர்கள் வேறு இடம் வேண்டுமென்று கேட்டார்கள். இப்போது திருத்தாண்டிப்படி வில்லேஜில் இடம் கொடுப்பதாக இருக்கிறது. அதைப்பற்றி கலெக்டர் தாசில்தாருக்கு அனுப்பியிருக்கிறார். அது பரிசீலனையில் இருக்கிறது.